20.01.2026

O.S.No.496/2012

பி.வா.சா.1.திரு.கண்ணன், த.பெ.திரு.அழகர்சாமி.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1) நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது வீடு நாராயணபுரம் பேங்க் காலனியில் உள்ளது. தாவா சொத்து நாராயணபுரம், நத்தம் மெயின் ரோட்டில் உள்ளது. தாவா சொத்து நான் வைத்திருக்கும் கடைக்கு பக்கத்தில் உள்ள இடமாகும். தாவா சொத்து நான் வைத்திருக்கும் கடைக்கு வடக்கு பக்கம் உள்ளது. தாவா சொத்திற்கும் எனது கடைக்கும் இடையில் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்தம் விஸ்தீரணம் 370 1/2 சதுர அடி ஆகும். தாவா சொத்து ஆதியில் அங்கமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அங்கமுத்து என்பவர் பக்கத்தில் கடை வைத்திருந்தார் எனக்கு தெரியும். அங்கமுத்துவை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 1995ஆம் ஆண்டு முதல் தெரியும். அங்கமுத்து நில புரோக்கராக இருந்தார். அங்கமுத்துவை எனக்கு 1995ஆம் ஆண்டுமுதல் தெரியும்.

2) நான் தாவா சொத்தை 13.03.2008ம் தேதியில் கிரையம் வாங்கினேன். கிரையப்பத்திரம் அங்கமுத்து என்பவர்தான் எழுதிக் கொடுத்தார். வாதியை எனக்கு தெரியுமா என்றால் 2015ம் ஆண்டு தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கிரையம் ஒப்பந்தம் செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

3) வா.சா.ஆ.8 ஆவணம்தான் நான் வாங்கிய கிரைய ஆவணம் என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணமானது 18.01.2008 தேதியில் அங்கமுத்து என்பவர் வாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ள ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வா.சா.ஆ.4 ஆவணமானது கிரைய ஒப்பந்த நீட்டிப்பு பத்திரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல.

4) அங்கமுத்துவிற்கு மொத்தம் 3 மகள்கள் உள்ளனர். அன்னமயில் என்பவர் மூத்த மகள், இருளாயி என்பவர் இரண்டாவது மகள், போதுபொன்னு என்பவர் மூன்றாவது மகள். அங்கமுத்துவின் மனைவி பெயர் பாப்பு என்ற பாப்பம்மாள் ஆகும். அங்கமுத்துவின் மூன்று மகள்களையும் மனைவியையும் நன்கு தெரியும். அங்கமுத்துவின் குடும்பத்தினருக்கும் எனக்கும் எந்த காலத்திலும் பிரச்சனை இல்லை. வாதி சொல்லும் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தம் மற்றும் வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்த நீட்டிப்பு ஆவணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அங்கமுத்துவிற்குதான் தெரியும் என்றாலும் சரிதான்.

5) நான் கிரையம் வாங்கியபொழுது மூல பத்திரம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் அசல் பத்திரத்தை அமுதா என்பவரிடம் அடமானம் வைத்துள்ளதாக தெரிவித்தார். தாவா சொத்து சம்மபந்தபட்ட அசல் ஆவணத்தை அங்கமுத்து வாதியிடம் ஒப்படைத்துள்ளார் என்றால் அசல் ஆவணத்தை அமுதாவிடம் ஒப்படைத்ததாகதான் என்னிடம் சொன்னார் அமுதா என்பவர் மாண்புமிகு மதுரை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.96/2008 வழக்கில் ரூ.238000/– செலுத்தினேன். நான் பணம் செலுத்தியதை எதிர்த்து மாண்புமிகு உயர் நீதிமன்றத்திலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்து

அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அமுதா இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் வாதி ஆறுமுகம் என்பவரது உறவினர் ஆவார். அமுதா வாதி ஆறுமுகம் என்பவருக்கு உறவினர் அல்ல என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

6) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்றால் ஆமாம். பொதுவாக கிரையம் வாங்கும் போது அசல் ஆவணங்களை பார்த்துதான் வாங்குவது வழக்கம் என்றால் ஆமாம். தாவா சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்கள் வாதி வசம் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருந்தபோதிலும் நானும் அங்கமுத்துவும் கூட்டாக மோசடியாக வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல.

7) நான் தாவா சொத்தை 6ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.13 ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.13 ஆவணம் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியாது எனக்கு 2015ம் ஆண்டு தான் தெரியும். எனக்கு வழக்கு விபரம் தெரிந்துதான் நான் தாவா சொத்தை 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

8) வாதி தாவா சொத்தை பொறுத்து மொத்த கிரைய தொகையில் ரூ.75000/– முதலில் வா.சா.ஆ.3ன் படி ரூ.50000/–மும், வா.சா.ஆ.4ன்படி ரூ.10000/– மும் ஆக மொத்த கிரைய தொகையில் பெரும்படியான தொகையை ரூ.65000/– கொடுத்துவிட்டார் என்றாலும் சொத்தின் சுவாதீனத்தை அங்கமுத்து வாதி வசம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பத்தில் ஓட்டு வீடு என்றால் ஆமாம். 2015ம்

ஆண்டு அதை இடித்து கட்ட ஆரம்பித்தேன் என்றால் 6ம் பிரதிவாதி வாங்கி கட்ட ஆரம்பித்தார். நான் தான் 2015ல் ஓட்டு வீடை இடிப்பதற்கு ஏற்பாடு செய்தேன் என்றால் சரியல்ல. வாதி என்னிடம் ஏன் ஓட்டு வீட்டை இடிக்கிறாய் என்று கேட்டாரா என்றால் என்னிடம் கேட்டார். நான் வீட்டின் உரிமையாளரிடம் கேட்டுக்கொள் என்று சொன்னேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக கூறினார் நான் காவல் நிலையம் சென்று பதில் கூறினேன்.

9) வாதி கொடுத்த புகாரில் தாவா சொத்தின் சுவாதீனம் வாதி வசம் இருப்பதாகதான் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். போலீஸார் கிரையம ஆவணம் யார் பெயரில் உள்ளது என்று பார்த்துவிட்டு நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

10) பி.வா.சா.ஆ.1 இ.பி. எண்.43/2010 மனுவானது அமுதா என்பவர் அங்கமுத்துவிற்கு எதிராக தாக்கல் செய்த மனு என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.2 ஆவணமானது இ.பி. 43/2010 மனுவில் நான் தாக்கல் செய்த கோரிக்கை மனுவாகும். இ.பி. 43/2010 மனு நடவடிக்கையிலோ நான் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவிலோ வாதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஓ.எஸ்.368/2012 வழக்கு நடவடிக்கையில் வாதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். தாவா சொத்தின் மூல பத்திரமான வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களை அமுதா இ.பி. 43/2010 வழக்கிலோ, ஓ.எஸ்.368/2012 வழக்கிலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11) அங்கமுத்து 2011ம் ஆண்டு மே மாதம் இறந்தார். அங்கமுத்துவின் குடும்பத்தினர் நாராயணபுரத்தில்தான் வசிக்கிறார்களா என்றால் ஒரு மகள் வசிக்கிறார். மற்ற இரண்டு மகள்கள் வெளியில் வசிக்கிறார்கள்.

நாராயணபுரத்தில் வசிக்கும் மகளிடம் பேசிக்கொள்ளுவேனா என்றால் பார்த்தால் பேசிக்கொள்ளுவேன். அவரிடம் இந்த வழக்கை பற்றி பேசிக்கொள்ளுவேனா என்றால் அவர் தான் 2015ம் ஆண்டு இந்த வழக்கை பற்றி என்னிடம் சொன்னார். எனக்கு 2012ம் ஆண்டு இந்த வழக்கை பற்றிய விவரம் தெரியும் என்றாலும், வழக்கிற்காக 2015ம் ஆண்டுதான் தெரியும் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம் தெரிந்துதான் தாவா சொத்தை அபகரிக்க முற்பட்டு எதிர்வழக்காடுகிறேன் என்றால் இல்லை. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.